**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**M.C.O.P.129/2022**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | **:** | **RW.2** |
|---|---|---|
| Name | : | அரவிந்த் செல்வன் |
| Father’s / Husband Name | : | தாமரை செல்வன் |
| Village / முகவரி | : | கிளை மேலாளர், மேக்மா ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | 24 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 5th March 2026

**முதல் விசாரணை**

நான் தற்போது மேட்டுப்பாளையம் மேக்மா ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியில் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் சாட்சி ஆவேன் . முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் . அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -

1, காப்பீட்டு சான்றிதழ் - அலுவலக நகல் - எ.ம.சா.ஆ 7.

2. 1மற்றும் 2ம் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பு அலுவலக நகல் . எ.ம.சா.ஆ.8

3. 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான. அஞ்சலக ஒப்புகை அட்டை. எ.ம.சா.ஆ.9 .

4. 2 ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட கவர் அசல்

எ.ம.சா ஆ.10 9

மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து சமயம் காப்பீடு இருந்தது என்றால் சரிதான் . 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சட்டப்படியான காப்பீடு உள்ள நிலையில் மனுதாரருக்கு எங்கள் நிறுவனம்தான் காப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல . ஓட்டுநர் உரிமம் இல்லாவிட்டாலும் மனுதாரருக்கான காப்பீட்டை கொடுத்து விட்டு வாகனத்தின் உரிமையாளரிடம் எங்கள் நிறுவனம் வசூல் செய்து கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல . மனுதாரர் எங்கு வேண்டுமானாலும் ஓட்டுநர் உரிமம் பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரியல்ல.

மனுதாரர் மருத்துவமனையில் இருந்ததால்தான் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஓட்டுநர் உரிமம் வழங்க இயலவில்லை என்றால் சரியல்ல . உண்மையிலேயே மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் அவரின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும் ஓட்டுநர் உரிமம் இருப்பதால்தான் மனுதாரர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது முன்தொகையை கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான் . அதன் பின்னிட்டு சிகிச்சை முடிந்ததும் அதை கழித்துக் கொள்வதும் வழக்கம் என்றால் சரிதான்.

மனுதாரர் செலுத்திய முன்தொகையை கழித்துதான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . மனுதாரருக்கு போக்குவரத்து செலவுகளையும் எங்கள் நிறுவனம் கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல . மனுதாரருக்கு ஏற்பட்ட போக்குவரத்து செலவைதான் மருத்து ரசீதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.